சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

தகவல் அறிவும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி: 044-29515580

ஆணை நாள் 02.06.2022

**முன்னிலை**

**முனைவர் ரா.பிரதாப்குமார்**

**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 12155/B/2021**

திரு. K.சக்திவேல் — மேல்முறையீட்டாளர்

எதிர்

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
காட்டுமன்னார்கோவில் வட்டம்,
கடலூர் மாவட்டம் — பொது அதிகார அமைப்பு

**ஆணை**

இவ்வாணையத்தால் இன்று 02.06.2022) நடத்தப்பட்ட விசாரணைக்கு மனுதாரர் திரு. K.சக்திவேல் அவர்கள் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக, திருமதி. கற்பகம், தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், காட்டுமன்னார்கோவில் வட்டம், கடலூர் மாவட்டம் அவர்கள் ஆஜரானார்.

2. மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ் 24.04.2021 தேதியிடப்பட்ட மனுவில், காட்டுமன்னார்கோயில் வட்டம், மெய்யாத்தூர் கிராமத்தில் புல எண் 124/4 (பழைய எண் 1/1)ல் 0.526 ச.மீ பரப்புகளை உடைய குடியிருப்பு மனை பகுதியை 1994ம் ஆண்டு நத்தம் நிலவரி திட்டத்தில் அரசு புறம்போக்கு நிலமாக உள்ளதன் விவரங்களை தகவல்களாக வழங்கக் கோரி காட்டுமன்னார்கோயில் வட்டாட்சியர் அலுவலக பொது தகவல் அலுவலர் அவர்களுக்கு மனு செய்துள்ளார்.

3. உரிய தகவல்கள் வழங்கப்படாததால் மனுதாரர் 28.07.2021 தேதியிட்டு, தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலர் அவர்களுக்கு விண்ணப்பித்துள்ளார். முழுமையான தகவல்களை பெற்றுத் தருமாறு தெரிவித்து, மனுதாரர் 22.09.2021 தேதியிட்ட இரண்டாவது மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். மனுதாரரின் இரண்டாவது மேல்முறையீட்டு மனுவின் மீது இன்று (02.06.2022) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர் அவர்கள், தான் கோரிய தகவல்கள் பொது தகவல் அலுவலரால் தனக்கு கிடைக்கப்பெற்றது என்றும், ஆகையால் மேற்கொண்டு விசாரணை தேவையில்லை என்றும் நேரடியாக இன்றைய விசாரணையில் ஆஜராகி தெரிவித்ததன் அடிப்படையில், இவ்வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

**ஒம்/-ரா.பிரதாப்குமார்**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**பிரிவு அலுவலர்**

**<u>வழக்கு எண். SA 12155/B/2021</u>**
**<u>பெறுநர்</u>**

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
காட்டுமன்னார்கோவில் வட்டம்,
கடலூர் மாவட்டம்

திரு. K.சக்திவேல்,
1/174 தில்லை அம்மன் நகர்,
பள்ளிப்படை, சிதம்பரம்,
கடலூர் மாவட்டம் 608 001

Copy to: File
SCPA-15.06.2022